DINAMANI 01 MAY 2010

# ஈஷா அறக்கட்டளைக்கு ஒரு கோடி மரக்கன்றுகள் நன்கொடை

**கோவை, ஏப்.30:** கோவை ஈஷா அறக்கட்டளைக்கு ஒரு கோடி மரக்கன்றுகளை நன்கொடையாக ஈவ்ஸ் ரோச்சர் குழுமம் அளிக்கவுள்ளது.

சர்வதேச அளவில் இயற்கை அழகு சாதன தயாரிப்பில் ஈவ்ஸ் ரோச்சர் குழுமம் முன்னணியில் உள்ளது. இந்த நிறுவனத்தின் பொன்விழா வரும் 2015-ம் ஆண்டு கொண்டாடப்படுகிறது.

இவ் விழாவையொட்டி, உலகெங்கும் 5 கோடி மரக்கன்றுகளை நட்டு வளர்க்க அந் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அத் திட்டத்தின்படி, ஒரு கோடி மரக்கன்றுகள் ஈஷா அறக்கட்டளை மூலம் தமிழகத்தில் நடப்படுகின்றன.

ஈவ்ஸ் ரோச்சர் நிறுவனம் ஏற்கெனவே வழங்கிய 10 லட்சம் மரக்கன்றுகளை பல மாவட்டங்களில் வெற்றிகரமாக ஈஷா நட்டுள்ளது. அவற்றை ஆய்வு செய்யவும், மேலும் 90 லட்சம் மரக்கன்றுகளை அளிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் அந்த நிறுவனத்தின் ஐவர் குழு கோவைக்கு வெள்ளிக்கிழமை வந்தது.

ஈஷா வளாகத்தில் நடந்த கூட்டத்தில் ஈஷா நிர்வாகிகளுடன் அக் குழுவினர் ஆலோசனை நடத்தினர். வரும் 2014-ம் ஆண்டுக்குள் 1 கோடி மரக்கன்றுகள் நடுவதற்கு தேவையான உதவிகளை செய்வதாக அந் நிறுவன நிர்வாகிகள் உறுதி அளித்துள்ளனர்.